பொன்னேரி

# வேலம்மாள் மெட்ரிக் பள்ளி 100 சதவீத தேர்ச்சி


▶ எம். கோபிகா ஸ்ரீ


▶ ஏ.ஆப்ரின்


▶ ஜி.சாய்ராமன்

திருவள்ளூர், மே 18:பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடந்த பிளஸ் 2 தேர்வில் 1163 பேர் தேர்வு எழுதினர். இதில் அனைத்து பேரும் முதலிடத்தில் தேர்ச்சி பெற்றனர். வேதியியல், உயிரியல் பாடத்தில் மாநில அளவில் 3ம் இடத்தையும், மாவட்ட அளவில் 2ம் இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளது.

மாணவி எம்.கோபிகாஸ்ரீ தமிழ்-198, ஆங்கிலம்-194, இயற்பியல்-199, வேதியியல்-200, உயிரியல்-200, கணிதம்-200 என 1191 மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலிடம் பிடித்துள்ளார்.

மாணவி ஏ.ஆப்ரின் தமிழ்-198, ஆங்கிலம்-192, கணிதம்-199, இயற்பியல்-199, வேதியியல்-200, உயிரியல்-200 என மொத்தம் 1188 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தார்.

மாணவன் ஜி.சாய்ராமன் தமிழ்-197, ஆங்கிலம்-194, கணிதம்-199, இயற்பியல்-199, வேதியியல்-197, கணினி அறிவியல்-200 என 1186 மதிப்பெண் பெற்று 3ம் இடத்தை பிடித்துள்ளார்.

கணிதத்தில் 50, உயிரியல் 29, வேதியியல் 24, வணிக கணிதம் 16, கணக்கு பதிவியல் 10, வணிகவியல் 5, கணினி அறிவியல் 3, பொருளியல் ஒருவர் என மொத்தம் 138 பேர் 200க்கு 200 மதிப்பெண் பெற்றுள்ளனர்.

சாதனை படைத்த மாணவ, மாணவியர்களை வேலம்மாள் கல்விக் குழுமத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம், இயக்குனர் எம்.வி.எம்.சசிகுமார், முதல்வர் ஜி.ஆர்.சாந்தி, துணை முதல்வர் ஆர்.லாவண்யா வாழ்த்தினர்.